[1975 மார்ச் 8

(முற்பகல் 10-00)

THIRU B. VENKATASWAMY : Due to water stagnation and drinking of bad water the sheep are getting snails and so many sheep are dying. May I know from the Hon. Minister whether eradication of snails in the sheep will be taken up in Dharmapuri district, especially because lot of sheep are dying there?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, மழைக் காலத்திலே ஹோசூர் பகுதியிலே நத்தையின் மூலமாக ஆடுகளுக்கு வியாதி பரவுகிறது. இப்பொழுது மழை இல்லாத நிலையில் இதுபோன்ற நிலை அங்கே இருப்பதாகத் தகவல் இல்லை. அப்படிப்பட்ட தகவல் இருக்குமானால் அமல் படுத்தலாம்.

New hotel at Mudumalai

* 248 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to lease out lands in Mudumalai Sanctuary to private parties to run 'Tree-top' hotels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இப்பொழுது முதுமலையிலே யானைகள், இன்னும் மற்ற மிருகங்களைப் பார்ப்பதற்காக அடிக்கடி மக்கள் செல்கிறார்கள். இப்பொழுது உதகையில்தான் இம்மாதிரியான வசதி இருக்கிறதே தவிர, முதுமலைக்குப் போகின்றவர்களுக்கு அந்த ஏரியாவிலே அதிகாரிகள் தங்குவதற்கான இடம் வைத்திருக்கிறார்களே தவிர, மற்றவர்களும் தங்குவதற்கான இட வசதிக்கான ஏற்பாட்டைச் செய்ய அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, தனியார் அந்த இடத்திலே விடுதி கட்ட வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள். மூன்று மாநிலங்களின் தலைமைச் செயலாளர்கள், —கர்நாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த 3 செயலாளர்களும்—இந்தச் சரணாலயங்களை விஸ்தரிப்பதை யொட்டிப் பேசிய அந்தக் கூட்டத்தில் தனியார்களுக்கு இம்மாதிரி

1975 மார்ச் 8]

அனுமதி கொடுப்பது நல்லதல்ல என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்கு சுற்றுலாத் துறையின் மூலமாக இட வசதிக்கான ஒரு நிலையைப் பரிசீலிக்கச் சொல்லலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, முதுமலை வன விலங்குகளைப் பார்ப்பதற்காக இப்பொழுது ஆண்டுதோறும் நிறைய பயணிகள் வருகிறார்கள். ஆனால் அங்கே ரெஸ்ட் ஹவுஸ்கள் போதுமானவையாக இல்லை. 'செல்வின் லாட்ஜ்'க்கு ரிசர்வேஷன் செய்ய வேண்டுமானால்கூட சென்னையிலேயிருந்து தான் செய்ய வேண்டியிருக்கிறது. அதை அங்கேயே ரிசர்வ் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, அங்கே செல்கின்றவர்களுக்கு அரசாங்கம் ஓரளவுதான் வசதியைச் செய்யலாம். அதை ஒரு ஊரைப் போன்று ஆக்க முடியாது. கட்டிடங்கள் குறைவாக இருந்தால்தான் வன விலங்குகளின் சஞ்சாரம் இருக்க முடியும். சாதாரணமாக அத்தியாவசியமான தேவைகளான தங்குதல், உணவு அருந்துதல் போன்றவற்றிற்கு வசதிகள் செய்யப்பட வேண்டுமென்பது அவசியம்தான். அதற்காக அரசுத் துறையின் மூலமாகவாவது, சுற்றுலாத்துறை மூலமாகவாவது ஏதாவது மேலும் செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, இந்தமாதிரி மரத்தின் மீது ஹோட்டல் கட்டுவது என்ற ஒரு குறிப்பு ஏற்கனவே வனத்துறையிடம் இருந்ததே, அது கைவிடப் பட்டு விட்டதா? இப்பொழுது அமைச்சரவர்களின் பதிலில் சுற்றுலாத்துறை மூலமாகச் செய்வதுபற்றி ஆலோசிக்கலாம் என்று சொன்னார்கள். அதை வனத்துறை மூலமாகச் செய்வதே ரொம்ப இலாபமாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, வனத் துறை மூலமாகச் செய்வது இலாபம் இல்லை என்பதற்காகத்தான் சுற்றுலாத் துறை மூலம் எடுத்தால் வங்கிகளிலிருந்து பணம் பெற்று இலகுவாகச் செய்ய முடியும். சுற்றுலாத்துறையினர்

கூட ஆலோசனை கேட்டார்கள், அதைப்பற்றி அவர்களிடத்தில் இடம் வேண்டுமென்றால் பரிசீலித்து தருவதாக பேச்சளவில் ஒத்துக்கொண்டேன். அதுபற்றித் திட்டவட்டமான பரிசீலனை வந்த பிறகு முடிவு செய்யலாம்.

வலையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள்

*249 வினா—திரு. **த. சோனையா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள வலையர் வகுப்பினை அரிசன மக்கள் பட்டியலில் சேர்க்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : இல்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் சம்பந்தமில்லை. இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை.

கோணப்பராயன்குளம் கிராமத்தில் சாலை வசதி

*250 வினா—திரு. **பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குளித்தலை வட்டம், கோணப்பராயன்குளம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சுடுகாட்டுப்பாதை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தலைவரவர்களே, குளித்தலை வட்டம் ரெங்கநாதபுரத்தில் சிற்றூரான கோணப்பராயன்குளம் கிராமத்தில் குடியிருக்கும் அரிசன மக்களுக்கு சுடு காட்டுக்கு செல்ல பாதை அமைப்பதற்காக 7 சென்ட் நிலத்தை ஆர்சிதம் செய்வதற்கான பிரிவு 6 விளம்பல் வரைவு அரசினால்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.